சார்பு நீதிமன்றம், அவிநாசி

**MCOP.No.31 /2018**

**நாள் : 06.04.2023**

**ம.சா.2 கோவிந்தசாமி**

3-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :

1) மனுதாரர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். அவரும் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். இன்று மனுதாரருடன்தான், நான் நீதிமன்றத்திற்கு வந்தேன். மனுதாரர்தான் கார் ஓட்டினார். விபத்தின்போது மனுதாரர் வாகனத்திற்கும், என் வாகனத்திற்கும் இடையே 100 அடி இடைவெளி இருந்தது. விபத்து சம்மந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சி சொல்லவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.2 வரைபடம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் காங்கேயம் சாலையில் நானும், மனுதாரரும் வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம். விபத்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நான்கு ரோடு சந்திப்பில் நடந்ததா என்றால், நான்கு ரோட்டை சற்று தாண்டித்தான் நடந்தது. மேற்படி ம.சா.ஆ.2 ஆவணத்தில் நால்ரோட்டை தாண்டி நடந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து இடது புறம் திரும்பினால் ஊத்துக்குளி ஆர்.எஸ். செல்லும் வழியாகும்.

2)மேற்படி ஊத்துக்குளி ஆர்.எஸ்.க்கு திரும்பும் இடது புறத்தில் விபத்து நடந்ததாக ம.சா.2-ல் குறிப்பில்லை என்றால் சரிதான். எனது வாகனத்தை TN 55 AM 0185 என்ற கார் எனது வலதுபுறமாக ஓவர்டேக் செய்து மனுதாரரின் வாகனத்தின் இடதுபுறத்தில் இடித்தது. என்னை முந்தி 100 அடி தூரம் சென்ற பின்புதான் விபத்து ஏற்பட்டது. விபத்தின்போது நாங்கள் ஹெல்மெட் அணிந்திருந்தோம். மனுதாரர் கருப்புநிற ஹெல்மெட் அணிந்திருந்தார். மனுதாரர் எப்போதும் ஹெல்மெட் அணியும் பழக்கம் உள்ளவர். மேற்படி கார் டிரைவர் மீது குற்ற நடவடிக்கை விவரம் தெரியாது. விபத்திற்கு முழுக்க முழுக்க மனுதாரரின் அஜாக்கிரதைதான் காரணம் என்றால் சரியல்ல. அதனால்தான் 1-ம் எதிர்மனுதாரர் மீது எந்த குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.04.06 15:02:42 +0530

Subordinate Judge,
Avinashi.